பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 218

வியாழக்கிழமை
02 ஜூலை 2026

ஆனி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# அவசரகாலச்சட்டம் நேற்றுடன் நீக்கம்

அமைச்சர் நளிந்த தகவல்

கொழும்பு, ஜூலை 2

அவசரகாலச் சட்டம் இனி நீடிக்கப்படாது. அது நேற்றுடன் நீக்கப்பட்டது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

»11

மாகாணசபையின்

## அதிகாரங்களைப் பறித்தபின் தேர்தலை நடத்துவதற்குச் சதி

வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 2

வடமாகாணசபையின் அதிகாரங்களையும், திணைக்களங்களையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்துவிட்டு, அதற்குப் பின்னர் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் சதிசெய்கின்றதா என எண்ணத் தோன்றுகின்றது - இவ்வாறு வடமாகாணசபையின் அவைத்தலைவரும்

»11

## கடற்பரப்புகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

விரிவு பக்கம்:- 05

## காணிக் கட்டணத்துக்கு ரின் இலக்கம் கட்டாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவின் காணிகளைப் பயன்படுத்திவரும் பொது மக்கள், அதற்கான கட்டணங்களைச் செலுத்த வரும்போது வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தைக் (ரின்) கொண்டுவருவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. காணிச் சீர்திருத்த

»11

## கடவுச் சொற்களை உடன் கொடுக்கவும்

சுரேஷ் சாலேக்கு நீதிமன்றம் கண்டிப்பான உத்தரவு



கொழும்பு, ஜூலை 2

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணையை எதிர்கொண்டுள்ள சுரேஷ் சாலே, தனது திறன்பேசி மற்றும் கணினியின் கடவுச்சொற்களை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக

»11

## உணவுத்தவிர்ப்புப் போரை கைவிட்டார் சுரேஷ் சாலே!

கொழும்பு, ஜூலை 2

உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே அந்தப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளார்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டிருந்தார். அன்று

»11

## ஈழத்துச் சிதம்பரத்தில் ஞாயிறு கும்பாபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஜூலை 2

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க காரைநகர் திண்ணபுரம் ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத ஸ்ரீசுந்தரேஸ்வரப் பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் காலை 6.45

»11

## சிறுபோக நெல்லுக்கான நிர்ணய விலை அறிவிப்பு

விரிவு பக்கம்:- 03

## அதிவேகப் பயணத்துக்கு ரூ.25,000 வரை அபராதம்

விரிவு பக்கம்:- 03



இலங்கைக்கு

## உலகவங்கியால் 150 மில். டொலர்

கொழும்பு, ஜூலை 2

முதலீடுகளை ஊக்குவித்தல், போட்டித்தன்மையை வலுப்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட வேலைத் திட்டங்களுக்காக இலங்கைக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க உலக வங்கி தீர்மானித்

»11

சமூக வலைத்தளத்தில் அவதூறு எனத் தெரிவித்து

## துணைவேந்தர் உள்ளிட்ட 14 தரப்புகள் மீது வழக்கு

பேராசிரியர் ரகுராம் நடவடிக்கை



யாழ்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட 14 தரப்புகளுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் முன்னாள் கலைப்பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராம் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப்பீடாதிபதியான ரகுராமுக்கு எதிராக பல்கலைக்கழக முன்னாள் மாணவியொருவர் பல்கலைக் கழக மானியங்கள்

»11



"அப்பாடா...! அகிம்சையின் பிதாமகன் சாப்பிடத் தொடங்கிட்டார் கண்டியளோ...!"

மக்கள் ... நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4477 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 13 16 21 72 |
| விசேட எழுத்து | I |

### ஹந்தஹன ராசி சுப பலன்

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1544 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 27 45 50 54 |

### NLB ஜய

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0503 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 6 3 6 7 |

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2583 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கங்கள் | 12 48 51 76 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6235 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 4 4 4 7 2 7 |

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2265 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 23 45 56 57 |
| விசேட எழுத்து | Z |

### சுப தவசக்

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0351 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 25 37 39 |

# போதையில் மீட்சி பெறுவோர் தனியார் துறைக்கு உள்ளீர்ப்பு!

## அரசாங்கம் நடவடிக்கை

**கொழும்பு, ஜூலை 2**

**போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மீண்டு, தற்போது மறுவாழ்வு பெற்றுவரும் 10,000 க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளை உள்நாட்டுத் தனியார் துறையின் நிலையான தொழிற்றுறை வேலை வாய்ப்புகளில் இணைப்பதற்கான விசேட தேசிய வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.**

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர ஆகியோரின் தலைமையில், இது குறித்த விசேட கலந்துரையாடல் அமைச்சின் வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்தில் உள்நாட்டுத் தனியார் துறையின் கைத்தொழில் பிரிவுகளில் தற்போது 4 இலட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் காணப்படுவதாக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டினார். எனினும், அந்தப் பணியிடங்களுக்குத் தேவையான தகுதியுள்ள உள்நாட்டு ஊழியர்கள் இல்லாததன் காரணமாக இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளிலிருந்து வெளிநாட்டுத் தொழிலாளர்களை வரவழைக்க உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு நேரிட்டுள்ளது. அந்தவகையில் கைத்தொழில் அமைச்சின் நேரடித் தலையீட்டின்கீழ், முறையான தொழிற்பயிற்சிகளை வழங்கி, போதைப்பொருள்களிலிருந்து மறுவாழ்வு அளிக்கப்பட்ட இந்த இளைஞர் படையினரைக் கைத்தொழிலாளர்களிடம் ஒப்படைக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார். தற்போது பல்வேறு கைத்தொழில் துறைகளில் தொழிற்பயிற்சி பெற்ற, மறுவாழ்வு அளிக்கப்பட்ட சுமார் 10 ஆயிரம் இளைஞர், யுவதிகள் சமூகத்தில் இணைவதற்குத் தயாராக உள்ளனர். இவர்களை முறையான வேலைவாய்ப்புகளில் அமர்த்துவது நாட்டின் பொருளாதாரத்துக்கும் சமூகப் பாதுகாப்புக்கும் பலம் சேர்க்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

### சுபிரி தன சம்பத

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0943 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 6 7 2 0 0 0 |

### Super Ball DLB

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3209 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 05 29 60 62 |

### சனிதா DLB

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 22 34 60 61 |
| வெற்றி வாரம் | 5370 |

### SASIRI DLB

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 1039 |
| வெற்றி இலக்கம் | 21 24 30 |

### லக்ன ராசி DLB

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ராசி | கன்னி |
| வெற்றி இலக்கம் | 36 47 53 59 |
| சீட்டிழுப்பு வாரம் | 4921 |

### KAPRUKA DLB

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கம் | 11 27 41 61 |
| வெற்றி வாரம் | 2385 |

### அத கோடிபதி DLB

| | |
|---|---|
| திகதி | 01.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 14 18 26 50 |
| வெற்றி வாரம் | 3035 |


## டெங்கு ஒழிப்புக்காக துரித உதவி இலக்கம்

கொழும்பு, ஜூலை 2

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், அது தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளை வழங்கவும் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சின்கீழ் இயங்கும் 'விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைப் பிரிவு' புதிய துரித தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கமைய, பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் டெங்கு பரவல் தொடர்பான அவசரத் தகவல்கள், முறைப்பாடுகள் மற்றும் சந்தேகத்துக்குரிய இடங்கள் குறித்த விவரங்களை 011 - 7966366 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு தெரிவிக்கமுடியும். பொதுமக்களால் வழங்கப்படும் முறைப்பாடுகளைச் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்கு மிக விரைவாகக் கொண்டு சென்று, உரிய பகுதிகளுக்குச் சுகாதார அதிகாரிகளை அனுப்பி உடனடித் தீர்வுகளை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**3 கிராம் ஹெரோய்னுடன்**

## கைதானவருக்கு ஆயுள் தண்டனை!



கொழும்பு, ஜூலை 2

சுமார் 3 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு அநுராதபுரம் மாகாண மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர் கெக்கிராவை வீதி, தலாவ பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவராவார். இந்த வழக்கு நான்கு வருடங்களுக்கும் மேலாக அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தநிலையில் சந்தேகத்துக்கு இடமின்றி குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து இந்தத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டு, எதிரிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சரண குணவர்த்தனவால் மேன்முறையீட்டு மனு!

கொழும்பு, ஜூலை 2

ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் தனக்கு விதிக்கப்பட்ட 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை மற்றும் அபராதத்தை இரத்துச்செய்து, தன்னை விடுதலை செய்யுமாறு கோரி நான்கு மேன்முறையீட்டு மனுக்களை முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன தாக்கல் செய்துள்ளார்.

2006ஆம் ஆண்டு அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராகப் பணியாற்றியபோது, கட்டாய கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் வாகனங்களை குத்தகைக்கு எடுத்ததன் மூலம் அரசாங்கத்துக்கு நிதி இழப்பை ஏற்படுத்தினார் என, சரண குணவர்த்தனவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நான்கு வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது.

விசாரணை நடவடிக்கைகளின் பின்னர், கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு எதிரான அனைத்துக் குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளித்து ஒவ்வொரு வழக்குக்கும் தலா நான்கு வருடங்கள் வீதம் மொத்தம் 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் நீதிமன்றம் 1.8 மில்லியன் ரூபா அபராதமும் விதித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சொத்து விவரம் சமர்ப்பிக்கும் கால அவகாசம் நீடிக்கப்பட்டது

தொழில்நுட்பப் பிழைகள் காரணமாக மையப்படுத்தப்பட்ட மின்னணு அமைப்பில் பதிவு செயல்முறையை முடிக்க முடியாத அரசு அதிகாரிகளுக்காக தங்களது சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தக் கால அவகாசம் ஜூலை மாதம் 7ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிக்கை ஒன்றின் ஊடாக அறிவித்துள்ளது. இந்த நீடிக்கப்பட்ட காலப்பகுதியில் தாமதக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாதுஎன்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media




# அதிவேக வாகனத்துக்கு ரூ.25,000 வரை அபராதம்!

## பொலிஸார் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூலை 2**

**நாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், நிர்ணயிக்கப்பட்ட வேக வரம்பை மீறி அதிவேகமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக 25,000 ரூபா வரை மிக உயர் அபராதம் விதிக்க புதிய சட்டத்திருத்தம் மூலம் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.**



கொழும்பில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போது பொலிஸ் பரிசோதகர் ரவீன் சுமனரத்ன இதனைத் தெரிவித்தார். வீதிகளில் நிர்ணயிக்கப்பட்ட வேக வரம்பை விடவும் 20%வரையான கூடுதல் வேகத்தில் செல்லும் வாகனங்களின் சாரதிகளுக்குப் பொலிஸ் அதிகாரிகளால் நேரடியாக வீதியிலேயே அபராதம் விதிக்கப்படும். அனுமதிக்கப்பட்ட வேக வரம்பை விட 50%க்கும் அதிகமான வேகத்தில் உதாரணமாக அதிவேக நெடுஞ்சாலையில் மணிக்கு 150 கிலோமீற்றருக்கும் அதிக வேகத்தில் ஆபத்தான முறையில் செல்பவர்கள் நேரடியாகக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர். இவ்வாறு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் அதிவேகச் சாரதிகளுக்குக் குறைந்தபட்சம் 15,000 ரூபா முதல் அதிகபட்சமாக 25,000 ரூபா வரை அபராதம் விதிப்பதற்கான அதிகாரம் இந்தப் புதிய சட்டத்திருத்தத்தின் மூலம் நீதிமன்றங்களுக்கு வழங்கப்படவுள்ளது. வீதிகளில் அதிவேகமாகச் செல்லும் வாகனங்களைத் துல்லியமாகப் படம் மற்றும் காணொளி ஆதாரங்களுடன் கண்டறிவதற்காக, நாடளாவிய ரீதியில் உள்ள போக்குவரத்துப் பொலிஸாருக்கு அதிநவீன வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் வழங்கப்பட்டு, சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் பரிசோதகர் ரவீன் சுமனரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# சிறுபோக நெல்லுக்கான நிர்ணயவிலை அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

நடப்புச் சிறுபோகப் பருவத்தில் விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்படவுள்ள நெல்லுக்கான புதிய உத்தரவாத விலைகளை வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க அறிவித்துள்ளார். அதன்படி நாட்டு நெல் ஒரு கிலோகிராம் 120 ரூபாவாகவும் சம்பா நெல் ஒரு கிலோகிராம் 130 ரூபாவாகவும் கீரிச் சம்பா நெல் ஒரு கிலோகிராம் 140 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோல், தற்போது கையிருப்பிலுள்ள அரிசியை நுகர்வோருக்கு மிக விரைவாக விநியோகிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# முதலீட்டுச் சபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜூலை 2

இலங்கை முதலீட்டுச் சபையின் புதிய தலைவராகவும், அதன் உறுப்பினராகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

அத்துடன், அதன் ஏனைய உறுப்பினர்களாக விஷ் கோவிந்தசாமி, ஹர்ஷணி ரந்திலிகம, மங்கள கருணாரத்ன மற்றும் கே. ஏ. விமலேந்திரராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்குரிய நியமனக்கடிதங்கள், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அவர்களிடம் கையளிக்கப்பட்டன. (ச-இ)

# பாடசாலை ஹைஏஸ் சேவை; கட்டணம் குறைக்கப்படாது!

## ஓட்டுநர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலைத் திருத்தத்தின்கீழ் டீசல் விலை குறைக்கப்பட்டபோதிலும், பாடசாலை மாணவர்களுக்கான ஹைஏஸ் போக்குவரத்துக் கட்டணங்களில் எவ்வித குறைப்பும் செய்யப்படமாட்டாது என அகில இலங்கை பாடசாலை வேன் ஓட்டுநர்கள் சங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பராமரிப்புச் செலவுகள் அதிகரித்துள்ளமையால், தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறானதொரு கட்டணக் குறைப்பை மேற்கொள்ளமுடியாது எனச் சங்கத்தின் செயலாளர் லலித் சந்திரசிறி தெரிவித்துள்ளார். (ச-இ)



# ஒரு கோடி ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் சீனர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 2

ஒரு கோடியே 8 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்திவர முயன்ற நான்கு சீன விமானப் பயணிகள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க விமானநிலையத்தின் வருகை முனையத்தில் உள்ள 'பசுமை வழி' ஊடாக இந்த சிகரெட்டுத் தொகையை வெளியே கடத்திச் செல்ல முயன்றபோதே அவர்கள் சிக்கினர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 35 வயது மதிக்கத்தக்க சீன நாட்டு வர்த்தகர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சீன வர்த்தகர்களைக் கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் தடுத்துவைத்து, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் (ச-இ)

# செங்கோலைக் காணேலை!

வளைந்தால், சிம்மாசனம் கவிழும்! என்டு ஒரு ஐதீகம் இருக்கு. ஆனால் இப்ப சிம்மானசம் போன பிறகும் செங்கோலைக் காணாமல் தேடுற காலமாப் போட்டுது. வவுனியா மாநகரசபையிலதான் இப்பிடிச் செங்கோலைக் காணேலை என்டு தேடுகினமாம். அவையள் தேடுகினமோ இல்லாட்டி தேடுறமாதிரி நடிக்கினமோ தெரியேலை. வவுனியா மாநகரசபை இவ்வளவு காலமும் நகரசபையாத்தான் இருந்தது. பிறகு அதை மாநகரசபையா தரமுயர்த்தின பிறகு இப்பதான் முதல்முறையா எலக்சன் நடந்து முதலாவது மேயரா காண்டீபன் எண்டவர் தெரிவானவர். இப்ப அந்த மேயரைத்தான் ஆளுநர் 'நிர்வாகச் சீர்கேடு, நிதிமுறைகேடு' என்டு சொல்லி, வர்த்தமானியை வெளியிட்டு பதவியைப் பறிச்சுப் போட்டார். அந்தப் பதவி பறிப்பு விசயமே ஒரு அடாவடித்தனமான வேலை எண்டதுதான் கனபேரின்ர அபிப்பிராயம். உந்தப் பதவி பறிப்புக்கு எதிரா வவுனியா ரவுணில கடையடைப்பு, ஆர்ப்பாட்டம் எல்லாம் நடந்தது.

இப்ப அந்தப் பிரச்சினை செங்கோலில வந்து நிக்குது. பதவியைப் பறிச்சதால, மேயரின்ர ஒப்பீஸில இருந்த காண்டீபன்ர தனிப்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டு போகச் சொல்லி மாநகரசபைச் செயலாளர் சொல்லியிருக்கிறார். காண்டீபனும் சரியெண்டு தன்ர தனிப்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டு போட்டார். அப்பிடி அவர் கொண்டு போன பொருள்களோட செங்கோலையும் கொண்டு போட்டார் என்டும் அதை வாங்கித் தரச் சொல்லியும் இப்ப பொலிஸில முறைப்பாடு போட்டிருக்கிறார் முனிசிபல் செயலாளர். ஆனால் பதவி பறிபோனபிறகு காண்டீபன் முனிசிபலுக்கு வந்து தன்ர பொருள்களை ஏத்தேக்க, செயலாளர் அணிலேற விட்டிட்டு அண்ணாந்து பார்த்துக்கொண்டோ இருந்தவர்? ஏனென்டால் பதவியில்லாட்டி முன்னாள் மேயர் ஒரு சாதாரண பொதுமகன் தான். அப்பிடி ஒருத்தர் முனிசிபலுக்க இருக்கிற மேயரின்ர ஒப்பீஸுக்க வந்து தன்ர பொருள்களை எடுக்கேக்க, அவர் என்னென்ன பொருள்களை எடுக்கிறார் எண்டதைக் கண்காணிச்சு, அவருக்குச் சொந்தமில்லாத பொருள்களை முனிசிபல் தன்ர கட்டுப்பாட்டுக்க வைச்சிருக்கவேணும். அதுதான் நிர்வாக நடைமுறை. அந்த நடைமுறையில கோட்டை விட்டிட்டு இப்ப செங்கோலைக் காணேலை என்டு முறைப்பாடு குடுக்கினம் எண்டா ஏதோ உள்நோக்கம் இருக்கோணும். இப்பிடி இவை பொலிஸில முறைப்பாடு குடுத்தவுடன காண்டீபன் செங்கோலைத் திருப்பிக் குடுக்க முனிசிபலுக்குப் போயிருக்கிறார். ஆனால் 'நாங்கள் பொலிஸில முறைப்பாடு குடுத்திட்டம்,அதால வாங்கமாட்டம்' என்டு செயலாளர் திருப்பி விட்டிருக்கிறார். ஒரு பொருளைக் காணேலை என்டு முறைப்பாடு குடுத்தவை,அதை திருப்பி ஒப்படைக்கேக்க ஏன் வாங்க மாட்டன் என்டுகினம்? அப்ப உந்தச் செங்கோலை காண்டீபன் எடுக்கட்டும் என்டு வேணுமெண்டே விட்டிட்டு அதைச்சாட்டி முறைப்பாடு போட்டு பழிவாங்குகினமோ என்டும் சந்தேகமாகக் கிடக்குது.

அதைவிட இன்னொரு ருவிஸ்ரும் இருக்கு. மாநகர சபைக்குச் சொந்தமான அசையும்,அசையாச் சொத்துகள் எல்லாத்தையும் 'இருப்புப் பட்டியலில' பதிவுசெய்து வைக்கோணும் எண்டது சட்டம். அந்த இருப்புப் பட்டியலில இல்லாத எதுவும் மாநகசரசபைக்குச் சட்டரீதியாச் சொந்தமில்லை. இந்தச் செங்கோல் அப்பிடி முனிசிபலின்ர இருப்புப் பட்டியலில இல்லையாம். அதோட இப்பதான், முதல் முறையா மாநகரசபைக்கு மக்களால தெரிவுசெய்யப்பட்ட ஆட்சிவந்ததால அதுக்கெண்டு தனியா தன்ர பொறுப்பில செங்கோலைச் செய்விச்சுக் கொண்டு வந்ததும் பதவி பறிக்கப்பட்ட காண்டீபன் தான். அவருக்கும் இருப்புப் பட்டியலில செங்கோல் இல்லையெண்டதால அவையால ஒண்டும் செய்யேலாது என்டு நினைச்சுத்தான் செங்கோலை கொண்டு போயிருக்கிறாராம். ஆனால் இந்த விசயம் இப்பிடி இறுகும் என்டு ஆள் கனவிலையும் நினைக்கேலையாம் இப்பிடி ரண்டுபகுதியும் ஒரு செங்கோலை வைச்சு சதுரங்க வேட்டை மாதிரி மாறி மாறி காய் நகர்த்துகினம் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டிஜிற்றல் தொழில்நுட்பத்துடனான 'சிசு செரிய' பாடசாலை பஸ் சேவை



## யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஜுலை 2**

**பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், இலங்கையிலேயே முதற்தடவையாக டிஜிற்றல் தொழில்நுட்பத்துடனான 'சிசு செரிய' பாடசாலை பேருந்துச் சேவை யாழ்ப்பாணம் கொடிகாமம் மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.**

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆரம்ப நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டு சேவையை ஆரம்பித்துவைத்தனர். பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து வசதிக்கான பிரத்தியேகச் சேவையான 'சிசு செரிய' பேருந்துச் சேவை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் மாணவர்களிடமிருந்து அரைவாசிப் பயணக் கட்டணம் மாத்திரமே அறவிடப்படுவதுடன், எஞ்சிய தொகை அரசாங்கத்தால் மானியமாக வழங்கப்படுகின்றது. இந்தப் புதிய சேவையின் சிறப்பம்சமாக, மாணவர்களின் விவரங்கள் மற்றும் அவர்களது பெற்றோரின் கைத்தொலைபேசி இலக்கங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு, மாணவர்களுக்குப் பிரத்தியேக 'டிஜிற்றல் அட்டை' ஒன்று வழங்கப்படும். மாணவர் பேருந்தில் ஏறி குறித்த டிஜிற்றல் அட்டையைத் தொடுதிரையில் காண்பித்தவுடனேயே, அவர் பேருந்தில் ஏறிய நேரம் உள்ளிட்ட விவரங்கள் பெற்றோரின் தொலைபேசிக்கு உடனடியாகக் குறுஞ்செய்தியாகச் சென்றடையும். அதேபோன்று, மாணவர் பேருந்திலிருந்து இறங்கும்போதும் தொடுதிரையில் அட்டையைக் காண்பித்ததும், பாதுகாப்பாக இறங்கிய நேரத் தகவல் பெற்றோரின் தொலைபேசிக்குச் செல்லும். இதன் மூலம் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு முற்றுமுழுதாக உறுதிப்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் மாகாணத்தின் ஏனைய இடங்களுக்கும் இந்தப் பேருந்துச் சேவைகள் விரிவுபடுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ-113-66)

# பிரதான நகர்ப்பகுதிகளில் கமரா பொருத்தத் திட்டம்

கிளிநொச்சி, ஜுலை 2

பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் வீதி விபத்துகளைத் துல்லியமாகக் கண்டறியக்கூடிய வகையில், கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான நகர்ப்பகுதிகளில் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற வீதி விபத்துகளைத் தடுத்தல் தொடர்பான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் வீதி விபத்துகளைக் குறைப்பது தொடர்பாக பல்வேறு தரப்பினரும் தங்களுடைய ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைத்தனர். மாவட்டத்தில் அதிகரித்துவரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தும்நோக்கில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு குறிப்பிடப்பட்ட நேரங்களில் கனரக வாகனங்கள் பிரதான நகருக்குள் நுழைவதற்கான கட்டுப்பாடு, அதிகரிக்கும் பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் வீதி விபத்துகள் தொடர்பாகத் துல்லியமாகக் கண்டறியக்கூடிய வகையில் நகர்ப்பகுதிகளில் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்துதல், பாடசாலை மாணவர்களுக்கு, சிகை அலங்கார நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைவாக தலைமுடியை வெட்டுதல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன. (க-113)

# திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை அராலியில்

யாழ்ப்பாணம், ஜுலை 2

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமகாச் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் நடைபெறும் நாயன்மார் குருபூஜை விழா இத்தொடர்-2 திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை விழாவும் அராலி கிழக்கு மலையாளங்காடு ஜயனார் கோவிலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குச் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது. ஆன்மிக விருந்தின ராக தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன்கலந்துசிறப்பிக்கவுள்ளார். திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், சொற்பெருவேந்தர், திருவாசகப்பிரியன் க. கயிலைவாசனின் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் விடயப் பொருளில் சொற்பொழிவும் நடைபெறும் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ச)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜுலை 2

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தையொட்டி 1008 சங்காபிஷேகமும் மணவாளக் கோலத் திருவிழாவும் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8 மணியளவில் சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறுமென மேற்படி ஆலயப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜுலை 2

யாழ்ப்பாணம் - நல்லூர் தெற்கு- றாக்கா லேன் அருள்மிகு ஸ்ரீ பத்தினாச்சி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.55மணி தொடக்கம் 10.25 மணி வரை நடைபெறவுள்ளது. அதனையொட்டி எண்ணெய்க் காப்பு மற்றும் பால்க் காப்பு சாத்துதல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் சனிக்கிழமை பகல் 12 மணிவரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும்.

**கன்னி:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**தனுசு:** வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண் டாகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்தொற்றுமை ஏற்படும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் சற்றுத் தாமதமாகமுடியும். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாகத் திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும்.

**கும்பம்:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்**

**பொருள்:** உணவு உண்ணாமல் நோன்பு கிடப்பவர், பிறர் சொல்லும் கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர்க்கு அடுத்த நிலையில்தான் பெரியவர் ஆவர்.

## கள்ளமௌனத்தை காலம் மன்னிக்காது!

எந்தவொரு நாட்டில் சட்டம் சீராக நடைமுறையாகின்றதோ அந்த நாடுதான் வாழும் வளரும். ஜனநாயகத் தத்துவங்கள் நிறைந்த நல்லாட்சி என்பது அனைத்துக் குடிமக்களுக்கும் சட்டம் சீரான முறையில் அமுலாவதையே குறிக்கின்றது. சட்டவாட்சி ஒழுங்கான முறையில் நடைமுறைக்கு வராவிடில் அந்த நாட்டில் ஏதேனும் குழப்பநிலைகள் தொடர்ச்சியாக இருந்துகொண்டே இருக்கும். வன்முறைகளுக்கும், மோதல்களுக்கும், இன முரண்களுக்கும் மாறிமாறி தூபமிடப்பட்டே வரும். இலங்கையைப் பொறுத்தவரையில் சட்டம் பெரும்பான்மையின மக்களுக்கு ஒருவாறாகவும், சிறுபான்மையின மக்களுக்கு பிறிதொருவாறாகவுமே நடைமுறையாகிவருகின்றது. இதுதான் இந்த நாட்டின் ஆகப்பெரும் சாபக்கேடு.

மட்டக்களப்பு- மயிலத்தமடு மாதவனைப் பகுதியில் தமிழர்களின் பகுதிகளுக்குள் அத்துமீறி நுழைந்த சிங்களக் காடையர்கள், அங்கிருந்து தமிழ் மக்கள் அனைவரையும் கூண்டோடு வெளியேறுமாறு வலியுறுத்தியுள்ளனர். மயிலத்தமடுவில் தமது மேய்ச்சல் தரைகள் மீதான உரிமையை நிலைநாட்டுவதற்காக ஆயிரம் நாள்களுக்கு மேலாகப் போராடிவரும் தமிழ் மக்களை இலக்குவைத்தே இந்தக் காட்டுமிராண்டித்தனம் அரங்கேறியிருக்கிறது. இத்தனைக்கும் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை தொடர்பான விவகாரம் நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் உள்ள விடயமாக அமைகின்றது. அவ்வாறெனில் வன்முறையாளர்களுக்கு இத்தனை துணிவு எங்கிருந்து வந்தது? அதுதான் சட்டத்தின் ஆட்சி தோல்வியுற்றுள்ளதன் வெளிப்பாடு.

சட்டத்தின் ஆட்சி அமுலாகின்றது என ஆட்சியில் இருப்பவர்கள் கூறலாம். தமக்கு எதிரான அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் அவர்கள் மறுத்துரைக்கலாம். ஆனால், குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்ட விவகாரம், மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல்தரை விவகாரம், தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம் என ஏராளமான விடயங்களில் நீதிமன்றக் கட்டளைகள் அப்பட்டமாக உதாசீனம் செய்யப்பட்டுள்ளன. இதற்குக் காரணமான எவரும் உரிய முறையில் பொறுப்புக்கூறச் செய்யப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் சட்ட அமுலாக்கத் தரப்புகள் ஆக்கிரமிப்பாளர்களுடனும், வன்முறையாளர்களுடனும் இணைந்து இயங்குகின்றன என்பதே கசப்பான உண்மை.

மயிலத்தமடுவில் தமிழர்களின் பகுதிகளுக்குள் அத்துமீறி நுழைந்து கொலைமிரட்டல் விடுத்த அனைவரும் கைதுசெய்யப்படவேண்டும். அவர்கள் அனைவரும் சட்டத்துக்கு முன்பாக உடனடியாக பொறுப்புக்கூறச் செய்யப்படவேண்டும். இல்லையேல், இன்றைய கள்ள மௌனம், நாளைய வன்முறையாகவும், கலவரமாகவும் மாற்றம் பெறுவது உறுதி. மயிலத்தமடு மேய்ச்சல் தரையில், இடம்பெறும் ஆக்கிரமிப்புக்களால் ஏராளமான கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாலுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு வகையில் இது நாட்டின் பொருளாதாரத்தின் மீது வீழ்ந்த சம்மட்டி அறை. எனவே, இந்த நிலையை மாற்றவும், நாட்டை நேர்மையான முறையில் மீட்கவும் அநுர அரசாங்கம் திடசங்கற்பம் பூணவேண்டியது காலத்தேவையே.



## க.பொ.த. சாதாரண மாணவருக்கு அ.அட்டை வழங்கும் பணி துரிதம்

**கொழும்பு, ஜூலை 2**

**நடப்பு ஆண்டில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இந்த வருட இறுதிக்குள் பரீட்சார்த்திகள் அனைவருக்கும் அடையாள அட்டைகளை வழங்கி முடிக்க எதிர்பார்ப்பதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் ஹேரத் தெரிவித்துள்ளார். சாதாரண தர மாணவர்களின் விண்ணப்பங்களை எவ்வித தாமதமும் இன்றி அனுப்பிவைக்குமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, இதுவரை அடையாள அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள், திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலுள்ள தொலைபேசி எண்கள் அல்லது மின்னஞ்சல் ஊடாகத் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும். தேசிய பரீட்சைகள் தொடங்குவதற்கு முன்னர் அனைத்து மாணவர்களும் செல்லுபடியாகும் அடையாள அட்டைகளை வைத்திருப்பதை உறுதிசெய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். (எஇ)



## உடைமையில் ஐஸ் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 2

கொம்பனித்தெரு, வித்தானகே வீதியில் உள்ள வீடு ஒன்றில் கொழும்பு மத்திய பிரிவு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்று இரவு நடத்திய அதிரடிச் சோதனையில், 728 கிராம் 'ஐஸ்' போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, போதைப்பொருளை வீட்டில் மறைத்துவைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளரான 81 வயதுடைய வயோதிபப் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இச்சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரான அந்தப் பெண்ணின் மகன் வீட்டிலிருந்து தப்பியோடியுள்ளார். தலைமறைவாகியுள்ள மகனைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளைக் கொம்பனித்தெரு காவல்துறையினர் தீவிரமாக மேற்கொண்டுவருகின்றனர். (எ-இ)

## கடற்பரப்புகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 2

காங்கேசன்துறையிலிருந்து மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய, காங்கேசன்துறையிலிருந்து மன்னார், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடலுக்கு அப்பாலுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 50-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதுடன், அந்த கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படலாம். இது குறித்து மீனவர்கள் மற்றும் கடல் சார் சமூகத்தினர் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

## யானை தாக்கியதில் பாகன் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 2

குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மெணிக்ஹின்ன பகுதியில், 'முது' என்ற வளர்ப்பு யானை தாக்கியதில் 61 வயதுடைய யானையின் பாகன் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக தெல்தெனியப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## கைவிலங்குடன் தப்பிய சந்தேகநபர்

எல்பிட்டிய பகுதியில் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனக் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் அதிகாரிகள்மீது கூர்மையான ஆயுதத்தால் தாக்கிவிட்டு கைவிலங்குடன் தப்பியோடியுள்ளார்.

எல்பிட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினர் கஹதுவ பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையொன்றை முன்னெடுத்த போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. தப்பியோடிய சந்தேகநபரை மீண்டும் கைது செய்வதற்காகப் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

உ
சிவமயம்



# கிளிநொச்சி - பூநகர

## அருள்மிகு ஸ்ரீ செல்வயோக சித்

## புனராவர்த்தன அஷ்டபந்த

# மஹா கும்பாபிஷேக

**மஹாகும்பாபிஷேகம் : 02.07.2026 வியாழக்கிழமை**
**காலை 7.26 மணிமுதல் 8.56 மணிவரை**

விநாயகர் துதி
ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

விநாயகப் பெருமானின் அடியார்களே!

இலங்கைத் திருநாட்டின் சிரம்போல் விளங்கும் வீனாபுரியின் கீழ்த்திசையில் நீர்வளம். நிலவளம். பண்பாட்டு வளம் எனும் பலவளங்களை தன்னகத்தே கொண்டதுமான முழங்காவில் பகுதியில் தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு இடர்களைந்து மின்னாமல் முழங்காமல் இடி விழுந்து தண்ணீர் ஊற்றெடுத்து புதுமையுடன் கம்பீரமான சொப்ப சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் எங்கள் ஊர்நாயகன் செல்வயோக சித்தி விநாயகர் பெருமானுக்கு மங்கலமிகு பராபவ வருடம் ஆனி மாதம் 18ஆம் நாள் 02.07.2026 வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் 8.56 மணிக்குள் வரும் துதியைத் திதியும் உத்தராட நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இறையருள் கூடியுள்ளதால் அடியவர்கள் அனைவரையும் ஆசார சீலர்களாக வருகைதந்து கும்பாபிஷேகத்திலும் விழாக்காலங்களில் நடைபெறும் அனைத்து கிரியைகளிலும் கலந்து சிறப்பித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ சித்தி விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து வேண்டி நிற்கின்றோம்

### கிளிநொச்சி பூநகரி முழங்காவில், அருள்மிகு ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் தேவஸ்தானம் புனராவரத்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2026

அருள் மிகு செல்வயோக சித்திவிநாயகர் துணை எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் பேரருளாலும் ஆசியானாலும் எமது ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக பெருவிழா இனிதே நடைபெறுவதையிட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

ஓர் ஊரின் ஆன்மீக பலமே அந்த ஊரின் வளர்ச்சி ஆகும் " கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஆன்றோரின் வாக்குக்கு இணங்க எமது முழங்காவில் மண்ணின் முதல்வனாக வீற்றிருந்து நம் அனைவரையும். காத்தருள்கின்றான் குறுகிய கால திருப்பணிக்கு பின் ஆகம விதிகளுக்கு அமைய 5 குண்டங்கள அமைக்கப்பட்டு மிகுந்த பக்தி சிரத்தையுடன் நடைபெறும் இந்த மஹா கும்பாபிஷேகம் எமது பிரதேசத்திற்கு ஒரு புதிய ஆன்மீக ஒளியை தரும் என்பது ஐயம் இல்லை இத்திருப்பணி இனிதே நிறைவேற உடல்.பொருள் ஆவி என அனைத்தையும் அர்ப்பணித்த ஊர் பொது மக்கள் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் திருப்பணிகளை செவ்வனே மேற்கொண்டோர் மற்றும் அடியவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இம்மங்கல நிகழ்வுகளில் பக்தர்கள் அனைவரும் குடும்ப சமேதராய் வருகை தந்து கும்பாபிஷேக தீர்த்தத்தை ஏற்று விநாயகனின் அருட் கடாட்சத்தை பெற்று நோய் நொடிகளின்றி சகல சௌபாக்கியங் களுடனும் வாழ வேண்டும் என எம்பெருமானை பிரார்திக்கின்றோம்.**

**"விநாயகனின் ஆருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்"**
**ஆலய பரிபாலன சபையினர்.**

### ஔவை கண்ட ஆனைமுகன் பேராற்றல்!
### ஔவையார் அருளிய விநாயகர் அகவல் (பாதாதி கேச வர்ணனை)

அம்பிகை மைந்தனே செல்வமும் யோகமும் ஆதரித்து எமக்கருள வேண்டும்காண் -இன்பமுடன் ஈதொன்றும் குறையாமல் நற்காரியம் யாவும் உடனே சித்திதரக் காப்பு! விநாயகர் அகவல் என்பது ஔவையார் அருளிச்செய்த உன்னதமான. ஆன்மீக ஞானம் நிறைந்த ஒரு அற்புதப் பொக்கிஷமாகும். இதில் உள்ள முதல் 14 வரிகள். விநாயகப் பெருமானின் பிரம்மாண்டமான திருவுருவத்தை பாதாதி கேசமாக (பாதம் முதல் தலை வரை) நம் கண்முன்னே நிறுத்துகின்றன.

விநாயகர் அகவல் (முதல் 14 வரிகள்) சீதக் களபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பு பலவிசை பாடம் பொன்னரை ஞானும் பூந்துகில் ஆடையும் வண்ணமருங்கில் வளர்ந்தழகெறிப்ப பேழை வயிறும் பெரும்பாரக் கோடும் வேழ முகமும் விளங்குசிந் தூரமும் ஐந்து கரமும் அங்குச் பாசமும் நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும் நான்ற வாயும் நாலிரு புயமும் மூன்று கண்ணும் இரண்டு செவியும் இலங்குபொன் முடியும் திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்

14 வரிகளின் பாதாதி கேச திருவுருவ விளக்கம் சீதக் களபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பு பலவிசை பாட குளிர்ச்சியான நறுமணம் கொண்ட சந்தனக் கலவை பூசப்பட்ட செந்தாமரை மலர் போன்ற விநாயகப் பெருமானின் திருவடிகளில் அணிந்துள்ள சிலம்புகள் பலவிதமான ஓசைகளை (நாதத்தை) எழுப்புகின்றன. பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்: அவரது திருவரையில் (இடையில்) அழகிய தங்கத்தாலான அரைஞாண் கயிறும். மலரைப் போன்ற மென்மையான பட்டு ஆடையும் விளங்குகின்றன. வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்ப: அழகிய நிறம் கொண்ட அந்த இடப்பகுதியிலிருந்து பேரழகானது நாற்புறமும் ஒளிவீசிப் பிரகாசிக்கிறது. பேழை வயிறும்: அண்ட சராசரங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிய பெட்டி போன்ற பெரிய வயிறும். பெரும்பாரக் கோடும்: பாரத்தைத் தாங்கும் வலிமை மிக்க. கம்பீரமான ஒற்றைத் தந்தமும். வேழ முகமும் விளங்குசிந் தூரமும்: பயிர்களைக் காக்கும் வேழம் போன்ற யானை முகமும். அந்த நெற்றியில் பிரகாசிக்கும் செந்நிறச் சிந்தூரத் திலகமும் துலங்குகின்றன. ஐந்து கரமும் அங்குச பாசமும்: ஐந்து தொழில்களைக் குறிக்கும் ஐந்து கரங்களையும். அவற்றில் ஆன்மாவின் ஆணவத்தை அடக்கும் அங்குசத்தையும். பாசக்கயிற்றையும் ஏந்தியுள்ளார். நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்: முன்னே பக்த தர்களின் இதயங்களில் நீங்காது வாழ்கின்ற. ஆகாயத்தைப் போன்ற நீல நிறத் திருமேனியைக் கொண்டுள்ளார். நான்ற வாயும் நாலிரு புயமும்: துதிக்கையோடு சேர்ந்து தொங்குகின்ற அழகிய வாயும். ஆற்றல் மிக்க எட்டுத் தோள்களும் அவருக்கு உண்டு. மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்: சூரியன். சந்திரன். அக்கினி என முக்கண்களையும். கன்னங்களில் இருந்து வழியும் மூன்று வகையான மதநீரின் சுவடுகளையும் உடையவர். இரண்டு செவியும்: பக்தர்களின் குறைகளைக் கேட்கும் முறம் போன்ற பெரிய இரண்டு காதுகளும். இலங்குபொன் முடியும்: தலையிலே பிரகாசித்துக் கொண்டிருக்கும் அழகிய தங்கக் கிரீடமும் அமையப் பெற்றவர். திரண்டமுப் புரிநூல்: அவரது திரண்ட அழகிய திருமேனியில் முப்புரிநூல் (பூணூல்) புரண்டு கிடக்கின்றது. திகழொளி மார்பும்: இவை அனைத்தோடும் சேர்ந்து அவரது மார்பானது தெய்வீகப் பேரொளியை வாரி வீசிக் கொண்டிருக்கிறது. முடிவுரை: செல்வ யோக சித்தி விநாயகர் வழிபாடு விநாயகர் அகவலில் ஔவையார் வர்ணித்துள்ள இந்த 14 வரிகளின் பாதாதி கேச தியான வடிவம். வெறும் தோற்ற வர்ணனை மட்டுமல்ல அது பேரானந்தத்தை அளிக்கும் ஒரு உன்னத யோக நிலை ஆகும். இத்தகைய பிரம்மாண்ட வடிவோடு. அன்னை பராசக்தியின் அருளையும் பெற்று விளங்குபவரே "செல்வ யோக சித்தி விநாயகர்" ஆவார். இவரை வழிபடுவதால் நமக்குக் கிடைக்கும் பேறுகள்: செல்வ வளம் (அஷ்ட ஐஸ்வர்யம்): விநாயகரின் பேழை வயிறும் பொன்னாடையும் நம் இல்லங்களில் வறுமையை நீக்கி. தன தானிய சம்பத்துகளையும். அஷ்ட லட்சுமிகளின் அருளையும் அள்ளித் தரும். யோக சித்தி (ஞானம்): அவரது முக்கண்ணும். நீல மேனியும் நம் மூலாதாரச் சக்கரத்தை விழிப்படையச் செய்து. மன ஒருமுகப்பாட்டையும். ஆன்மீக யோக சித்திகளையும் அருளும். வெற்றி (காரிய சித்தி): ஐந்து கரங்களில் அவர் ஏந்தியுள்ள அங்குசமும் பாசமும் நம் வாழ்வில் வரும் தடைகளையும், எதிர்ப்புகளையும் தவிடுபொடியாக்கி. நாம் தொடும் காரியங்கள் அனைத்திலும் "சித்தி" எனப்படும் வெற்றியைத் தரும். வழிபாட்டுச் சிந்தனை: நறுமணம் மிக்க சந்தனப் பாதங்களையும். பொன்முடியையும் கொண்ட செல்வ யோக சித்தி விநாயகரை இந்த அகவல் வரிகள் மூலம் தினமும் தியானித்து வழிபடுவோம். அவர் நம் வாழ்வில் உள்ள விக்னங்களை (தடைகளை) வேரறுத்து. பொருள் செல்வத்தையும். அதற்கு மேலான அருள் செல்வத்தையும் தந்து வாழ்வை வளம் பெறச் செய்வார் என்பது திண்ணம்.

"செல்வ யோக சித்தி விநாயகர் திருவடிகள் போற்றி போற்றி!"

அ.யோகநாயகம்

என் ம
அருள்
தலைை
விநாயக
வெகுசீக்
வசந்தம
எல்லை
வெளிம
ஆலயத்
சிம்மாச
செய்திரு
ஊரின்

சிவஸ்ரீ
ஸ்ரீ செ

"அன்பே
முழங்க
பெருவி
ஓர் ஊ
நேர்மை
திருப்ப
வாழ்வி
உச்சாட
விழாவா
உன்னத
பெற்று
நீடூழி
நிர்வாக
எங்களத
சிவகும

அருள்மி
நிறைவு
வகையி
என்பை
விநாயக
ஊர் பெ
வாழ்த்த
வேண்டு

பே.சு

## கும்பாபிஷேக குருமார்

| | |
|---|---|
| வாமதேவ சிவாச்சாரியார் | சிவஸ்ரீ கந்த துசியந்த குருக்கள் (வவுனியா) |
| ஆகம கிரியா வித்தகர் | சிவஸ்ரீ தா. நகுலேஸ்வரக் குருக்கள் (யாழ்.) |
| சாதக சிரோண்மணி | சிவஸ்ரீ பகிதரக் குருக்கள் (முல்லைத்தீவு) |
| தேச கர்த்தி | சிவஸ்ரீ சு. சுதர்சன் குருக்கள் (ஸ்ரீ மாணிக்க விநாயகர் கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், பதுளை) |
| ஆகம கிரியா பூசணம் | சிவஸ்ரீ கந்த வரதராஜ குருக்கள் (குறிஞ்சிக் குமரன் கோவில் பேராதனைப் பல்கலைக்கழகம்) |
| கிரியா வித்தகர் | சிவஸ்ரீ திலீபன் குருக்கள் (யாழ்.) |
| ஆலய பூசகர் | பிரம்மஸ்ரீ. உதய பராஹர சர்மா |
| மங்கல வாத்தியம் | இ. கஜேந்திரன் குழுவினர் (முழங்காவில்) |
| மின்னிணைப்பு | வினோத் (முழங்காவில்) |
| பூமாலை அலங்காரம் | பால கணேஷ் தேசிகர் |
| கூரை, தச்சு வேலை | சதீஸ்வரன் - பாபு |
| கும்பாபிஷேக தலைமைக்குரு சர்வபோதகாசிரியர் | சிவத்தமிழ் வர்த்தகர், முத்தமிழ் குருமணி, சிவஞான வாதிரி, தத்துவ கலாநிதி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீ காந்தக் குருக்கள் J.P (ஸ்ரீ வித்தியா பீடம், யாழ்ப்பாணம்) |
| கும்பாபிஷேக நல்லாசி வழங்கும் குருமுதல்வர் | சிவஸ்ரீ ஸ்ரீ வத்சாங்க குருக்கள் (ஸ்ரீ தர்ம சாஸ்தா குருகுலம், இணுவில், யாழ்ப்பாணம்) |
| கும்பாபிஷேக பிரதிஷ்டா பி | "ஆகம கிரிஜா யோதி" சிவஸ்ரீ ஆறுமுக கௌரி மிது (பிரதமகுரு, ஸ்ரீ செல்வயோக சித்திவிநாயகர் தே |
| கட்டட வேலை | கண்ணதாசன் - |

**நகுலேந்திரன்**
**பல்பொருள் வாணிபம்**
பாடசாலைச் சந்தி,
முழங்காவில்.
077 282 1630

**ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ்**
மன்னார் வீதி,
முழங்காவில்.
077 169 3337

**நந்தன் களஞ்சியம்**
பாடசாலை வீதி,
நாச்சிக்குடா,
முழங்காவில்.

**ஆர்ஷன்**
**பல்பொருள் வாணிபம்**
மன்னார் வீதி,
முழங்காவில்
077 354 9519

**கண்ணன்**
**பல்பொருள் வாணிபம்**
நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்


யா
ம
மு
07

குறிப்பு: 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்,
தொடர்ந்து 12 ம் நாள் (13.07.2026) மண்டல பூர்த்தி அன்று அஸ்டோத்திர (108) சங்குகளால் சங்காபிஷேகம் நடைபெறும். பக்த அடியார்கள் பால்,
விநாயகனின் அருட்கடாட்சத்தை பெற்று நோய் நொடிகளின்றி சகல சௌபாக்கிய

முழங்காவில், பூநகரி,
கிளிநொச்சி.

"விநாயகனின் அருள் அனைவரு
இன்பமே சூழ்க எல்லே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கரி - முழங்காவில்
# சித்தி விநாயகர் தேவஸ்தான
# ந்தன பஞ்சகுண்ட பக்ஷ
# க சிறப்புமலர் - ௨௦௨௬

### "ஆகம கிரிஜாயோதி" சிவஸ்ரீ ஆறுமுக கௌரி மிதுலன் குருக்கள்
### ஸ்ரீ செல்வயோகசித்தி விநாயகர் ஆலயம், முழங்காவில் பூநகரி.

என் மனமார்ந்த ஆசிகள்!....

அருள் மிகு ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் தேவஸ்தான பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகத்தினை தலைமை ஏற்று எனது தலைமையில் நடாத்துவதை இட்டு பெருமிதம் கொள்கின்றேன். ஸ்ரீ செல்வ யோக சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினரின் விடா முயற்சியாலும் விநாயகப் பெருமானின் ஆலயத்தினை வெகுசீக்கிரம் புனரமைப்பு செய்யவேண்டும் என்கின்ற முயற்சியில் புதிதாக விநாகப்பெருமானின் வசந்தமண்டபத்தினையும் மிக அழகாக அமைத்து எம்பெருமானின் ஆலயத்தினை குறிப்பிட்ட வருட எல்லைக்குள் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளை நிர்வாகசபையினர். ஊர் மக்கள், அயல்கிராமத்தவர்கள், வெளிமாவட்டத்தில் வசிப்பவர்கள், புலம்பெயர் வாழ் மக்கள், இளைஞர்கள் அனைவரும் இணைந்து ஆலயத்தின் அத்தனை வேலைப்பாடுகளையும் நிறைவுசெய்து செல்வயோக சித்திவிநாயகப்பெருமானை சொற்ப சிம்மாசனத்தில் பிரதிஷ்ட்டை செய்து விநாயகப் பெருமானின் அருளாசி திருவருள் அனைவருக்கும் கிடைக்க செய்திருக்கின்றார்கள் அதேபோல் அனைவரும் எம்பெருமானின் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து எங்கள் ஊரின் மூத்த நாயகனின் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து நல்லசிகளும் வாழ்த்துக்களும் கூறி மகிழ்கின்றேன்.

"நன்றி"

**சிவஸ்ரீ ஆறுமுககௌரி மிதுலன் குருக்கள்**
**ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர், ஆலயம் முழங்காவில்.**

### ஸ்ரீ செல்வயோக சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக நல்லாசிகள்

"அன்பேசிவம் அருளேசக்தி" அருள்மிகு பூநகரிப் பிரதேசத்தின் தென்பால் எல்லையில் செல்வச் செழிப்பு மிகுந்த முழங்காவில் பதியிலமைந்த ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகப்பெருமானின் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேக பெருவிழா இனிதே நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

ஓர் ஊரில் ஆலயம் புதிப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் காணும்போது அந்த ஊரே ஆன்மீக அதிர்வுகளாலும், நேர்மறை ஆற்றலாலும் நிரம்புகிறது என்பது ஆன்மீக உண்மை. பழமை மாறாமல் பக்திசிரத்தையுடன் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்று கோபுர கலசங்களுக்குப் புனித நீர் ஊற்றப்படும் இன்நாள் நம் வாழ்வின் புண்ணிய தினமாகும். மூலமூர்த்தி மற்றும் பரிவார தெய்வங்களின் சிலைகளுக்கு மந்திரம் உச்சாடனங்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டு இறையாற்றல் பன்மடங்கு அதிகரிக்கின்றது. இக்குட முழுக்கு விழாவால் வறட்சி நீங்கி வாழ்வு செழிக்கிறது. சாதி மதபேதங்கள் கடந்து அனைவரும் ஒன்று சேர வழி பிறக்கும் உன்னத திருவிழா இதுவாகும். இந்த மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்துகொண்டு புனித நீரைப் பெற்று எம்பெருமானின் திருவருளால் நோய்நொடி யற்ற வாழ்வும் மங்காத செல்வமும் மன அமைதியும் பெற்று நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம். திருப்பணிகளைச் செல்வனே முன்னின்று நடாத்திய ஆலய நிர்வாகத்தினர் பணம் மற்றும் பொருள் உதவிய ஊர் பெரியவர்கள் தனவந்தர்கள் அடியார்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த வாழ்த்துகளும் ஆசிகளும் உரித்தாகும்.

**சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், தவிசாளர் பூநகரிப் பிரதேச சபை.**

### திரு.வே.ஆயகுலன் பிரதேச செயலாளர், பூநகரி

புகழ் பூத்த பூநகரி பிரதேசத்தின் தொன்மைக் கிராமமான முழங்காவில் மண்ணின் புனித அடையாளமாய், நம் இதயங்களை புதுப்பொலிவுறச் செய்யும் தெய்வீக சக்தியாய் விளங்கும் முழங்காவில் சித்திவிநாயகர் ஆலயத்தின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவைக் காணும் இந்த நன்னாள், பக்தர்களின் வாழ்வில் பேரானந்தமும், அமைதியும் நிறைவாக கிடைக்க அருள் கிடைக்கட்டும். எத்தனை தலைமுறைகளாக நாம் வணங்கி மகிழ்ந்த பெருமான், இன்று புதுப்பொலிவுடன் திகழ்வது கண்டு, எங்கள் உள்ளங்கள் பக்திப் பரவசத்தால் துள்ளிக் குதிக்கின்றன. விநாயகப் பெருமானின் அருள் ஒளி வீசும் இந்த ஆலயம், நமது பூநகரி பிரதேசத்தின் ஆன்மீகப் பெருமையை பறைசாற்றும் கலங்கரை விளக்கமாக என்றும் திகழட்டும். கோபுரத்தின் மீது புனித நீர் ஊற்றப்படும் அந்தத் தெய்வீகத் தருணத்தில், நமது மண்ணில் உள்ள அனைத்துத் தடைகளும் நீங்கி, துன்பங்கள் அகன்று, சுபிட்சம் பெருகட்டும். வறுமை ஒழிந்து வளம் பெருகவும், மக்கள் ஒருமைப்பாட்டுடன் வாழவும், அந்தச் சித்திவிநாயகன் தனது பரிபூரண அருளை வாரி வழங்க வேண்டுகிறோம். இன்றைய நன்னாளில், ஆலயத்தின் மணி ஓசை நம் மனக்கவலைகளை நீக்கி, வெற்றியை மட்டுமே கொண்டு வரட்டும். சித்திவிநாயகரின் திருவருளால் கல்வி, கலை, விவசாயம் என அனைத்துத் துறைகளிலும் எமது பிரதேசம் மேலோங்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை. இந்த மாபெரும் விழாவைச் சிறப்பாக முன்னின்று நடத்தும் ஆலய நிர்வாகத்தினருக்கும், ஒத்துழைப்பு வழங்கிய ஊர் மக்களுக்கும், வருகை தரும் பக்தர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பக்தி மணம் கமழும் இந்தத் திருநாளில், அருளும், ஆயுளும், நிறைந்த செல்வமும் பெற்று அனைவரும் இன்புற்று வாழ இறைவனை வேண்டுகிறேன். நமது மண்ணின் ஆன்மீக ஒற்றுமை மேலும் வலுப்பெறவும், இப்புனிதமான கும்பாபிஷேக விழாவில் பங்கேற்கும் அனைத்து மக்களுக்கும் அருள்மிகு செல்வயோக சித்தி விநாயகரின் இறையருள் நிறைவாக கிடைக்க வேண்டி நிற்கிறேன்.

**திரு.வே.ஆயகுலன், பிரதேச செயலாளர், பூநகரி**

### ஆசிச்செய்தி

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்றனர் இந்து சான்றோர்.தமிழர் தாயகத்தில் கிராமங்கள் தோறும் மக்களை ஒன்றிணைக்கின்ற பேராற்றல் இந்து ஆலயங்களிற்கு மட்டுமே இன்றும் உள்ளது. முன்னதாக கிராமங்களை ஒன்றிணைக்கும் சக்தியாக இருந்திருந்த இந்து ஆலயங்கள் தற்போது புலம்பெயர் தேசமெங்கும் வாழும் கிராம மக்களையும் அணிதிரளவைக்க காரணமாகியுள்ளன. ஒவ்வொரு ஆண்டிலும் தமது கிராம ஆலயங்களின் உற்சவங்களிற்கென திரண்டு தாயகம் வரும் புலம்பெயர் உறவுகள் அதற்கு சாட்சியாகவுள்ளனர். இந்து மதம் செழித்தோங்க தங்குதடையற்ற உள்ளூர் மக்களது பங்களிப்புடன் தற்போது புலம்பெயர் உறவுகளது கைகளும் பலம் சேர்த்துவருகின்றது. இவ்வகையில் பூநகரியின் வரலாற்று பெருமை மிக்க முழங்காவில் சிறி செல்வயோக சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக உற்சவம் சிறப்பிக்க எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை பூநகரி பிரதேசசபை தெரிவித்துக்கொள்கின்றது. எல்லாம் வல்ல முழங்காவில் ஸ்ரீ செல்வயோக சித்திவிநாயகன் பக்தர்களிற்கு எல்லா செல்வங்களையும் மகிழ்ச்சியையும் அள்ளி வழங்க வேண்டி நிற்கின்றோம். நன்றி

**இரத்தினம் தயாபரன், செயலாளர், பூநகரி பிரதேசசபை.**

### "அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் இறைவருள் போற்றி!"

அருள்மிகு முழங்காவில் செல்வயோக சித்தி விநாயகர் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே நிறைவுற்று. அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் கண்ட நன்நாளில். இத்தெய்வீக நிகழ்வை ஆவணப்படுத்தும் வகையில் கும்பாபிஷேகச் சிறப்பு பிரசுரம் வெளிவருவது எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கோவில்கள் என்பவை வெறும் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல அவை நம் பண்பாடு. கலை. ஆன்மீகம் மற்றும் வாழ்வியலின் கருவூலங்கள் ஆகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற ஔவையின் வாக்கிற்கிணங்க. விநாயக பெருமான் இல்லத்தைப் புதுப்பித்து. குடமுழுக்கு காண்பது இப்பிறவியில் நாம் செய்யும் மகா புண்ணியமாகும். இந்த உன்னதப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட திருப்பணிக் குழுவினர். ஊர் பொதுமக்கள், ஆன்மீகப் பெரியோர்கள் மற்றும் அடியார்களின் கூட்டுப் பிரார்த்தனையும். உழைப்பும் போற்றுதலுக்குரியவை. இத்திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா சிறப்பாய் அமைய எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லையற்ற அருளை வாரி வழங்கும் முழங்காவில் செல்லயோக சித்தி விநாயகர் அடியார் பெருமக்கள் அனைவருக்கும் எல்லா வளமும், நலமும், அமைதியும் தந்தருள வேண்டுகிறேன்.

"அவனருளாலே அவன்றாள் வணங்கி"

**பே.சுஜியந்தன். கிராம அலுவலர், முழங்காவில்.**

## ருமார்கள் விபரம்

**திஷ்டா பிரதம குரு**
ரிஜா யோதி"
**ளரி மிதுலன் குருக்கள்**
விநாயகர் தேவஸ்தானம், முழங்காவில்)

**னதாசன் - ராஜ்குமார்**

**சர்வசாதகர்கள்**
சிவஸ்ரீ. வைகுந்தன் ஐயா (வவுனியா)
பிரம்மஸ்ரீ பி. பவதர்ஷ சர்மா
(பிள்ளையார்பட்டி மாணவன், இந்தியா, தமிழ்நாடு)
சிவஸ்ரீ ரங்கநாத சிவாச்சார்யார்
(ஸ்ரீ காமாட்சி அம்மன் தேவஸ்தானம், இந்தியா, தமிழ்நாடு, காஞ்சிபுரம்)
பிரம்மஸ்ரீ திஜுசன் சர்மா (யாழ்ப்பாணம்)

**யாக சம்ரட்சகர்கள்**
பிரம்மஸ்ரீ. வி. சுதன் சர்மா (யாழ்ப்பாணம்)
பிரம்மஸ்ரீ. க. பிரதாப் சர்மா (யாழ்ப்பாணம்)
பிரம்மஸ்ரீ. அ. பிரபு சர்மா (கொழும்பு)
பிரம்மஸ்ரீ. சு. தனுசன் சர்மா (யாழ்ப்பாணம்)

**யாகசாலை**
சிவஸ்ரீ. கனேசன் ஐயா (கொழும்பு)

**ஓதுவார் மூர்த்தி**
"முதுகலைமாணி"
திரு. சுரேந்திரா நரேந்திரா
(விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)

**சிற்பவேலை**
நிசாந்தன் குழுவினர்
(அராலி தெற்கு)

**வர்ண வேலை**
தெய்வேந்திரம் - வினோத்
(செம்மன்குன்று, பூநகரி)

**ஒலி, ஒளி அமைப்பு**
சிவா
(முழங்காவில்)

**யாழ் பல்பொருள் வாணிபம்**
[ரூபன்]
மன்னார் வீதி,
முழங்காவில்.
077 749 6266

**கிருபா ஹாட்வெயார்**
மன்னார் வீதி,
முழங்காவில்.
077 734 0891

**மணமகள் நகையகம்**
நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி,முழங்காவில்,
(இலங்கை வங்கிக்கு முன்னால்)
021 228 3114, 077 938 4143

**முழங்காவில் பிள்ளையார் மரக்கறி வாணிபம்**
மன்னார், வீதி,
முழங்காவில்
076 485 2383

**நம்பிக்கை வெற்றிலை பல்பொருள் வாணிபம்**
சந்தை உட்புறம்
முழங்காவில்
077 420 3871

ர் பால், தயிர், இளநீர், நெய், தேன், பூவகைகள் தினமும் வழங்கி விநாயகப் பெருமான் அருள்பெற்று உய்வீர்களாக!
பாக்கியங்களுடனும் வாழ வேண்டும் என எம்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.
னைவருக்கும் கிடைக்ககட்டும்"
எல்லோரும் வாழ்க!

இவ்வண்ணம்
ஆலய பரிபாலனசபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




கோண்டாவில் காரைக்கால் சிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த திங்கட்கிழமை, பல நூற்றுக்கணக் கான அடியவர்களின் பங்கு பற்றுதலுடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. (சு-66)






கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (சு-17)

# தற்கொலைக்கு எதிராக விழிப்புணர்வுப் பயணம்




முல்லைத்தீவு, ஜூலை 2
தற்கொலை அற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில், இந்திய மாற்றுத்திறனாளி இளைஞரால் சைக்கிள் விழிப்புணர்வுப் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சென்னையைச் சேர்ந்த கமின் மொன்சாரி என்ற இளைஞரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வுப் பயணம் முல்லைத்தீவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, பரந்தன் ஊடாக யாழ்ப்பாணம் வரை இடம்பெறவுள்ளது. இந்தியாவில் பல பகுதிகளில் சைக்கிள் மூலம் 65 ஆயிரம் கிலோமீற்றர் வரை சென்று விழிப்புணர்வை ஏற்படுத்திய இவர், தற்போது இலங்கை முழுவதும் சைக்கிளில் பயணித்து விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றார். (சு-113)



# மூளாய் நான்காம் வீதியின் புனரமைப்புக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 2
வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட மூளாய் 4ஆம் வீதியின் புனரமைப்புப் பணிகளுக்கு கடந்த திங்கட்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டது. குறித்த வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன், உறுப்பினர் விஜிமருகன், கிராமமட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர். குறித்த வீதியானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருந்த நிலையில், பிரதேச சபையினரால் வீதி புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு-27)



வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த ஆனிப் பொங்கல் திருவிழா கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு பக்திபூர்வமாக இடம்பெற்றது. (சு-66)

# யாழ்.மாநகரசபையால் வீதிகளுக்கு மின்விளக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ்.மாநகரசபையால் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட மின்விளக்குகளை, தேவையான இடங்களுக்குப் பொருத்தும் நடவடிக்கைகள் வட்டார ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் தலா 25 மின்விளக்குகள் என்ற ரீதியில் பகிர்ந்தளிக்கப்பட்டு, வட்டார ரீதியாகப் பொருத்தப்பட்டு வருகின்றன. யாழ். மாநகரசபையின் 2 ஆம் வட்டாரமான கந்தர்மடம் வடமேற்கில், மாநகர உறுப்பினரான ப.தர்சானந்தால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆத்திசூடி வீதி, உள் ஒழுங்கைகள், பிறவுண்வீதி, சபாபதி வீதி, நாச்சிமார் கோவிலடி மற்றும் உள் வீதிகள் என்பனவற்றில் முதற்கட்டமாக மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. விரைவில் ஏனைய ஒழுங்கைகளுக்கும் தேவையான இடங்களில் புதிய மின்விளக்குகள் பொருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
20 . 07 . 1974

இறைவன் அடியில்
15 . 07 . 2022



## அமரர் கலைமதி செல்லத்துரை

(BBA (HONS), Dip IN PUB ADM, MA IN PUB ADM, LLB (Hons)
முன்னாள் கணக்காளர் வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
பணிமனை யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் தென்மராட்சி
வலயக்கல்வி அலுவலகம், முன்னாள் போதனாசிரியர்
அஞ்சல் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

நான்கு ஆண்டுகள் கடந்தாலும்,
நீ விட்டுச் சென்ற நினைவுகள் மட்டும்
நேற்றுப் போலவே நெஞ்சில் வாழ்கின்றன.
உன் சிரிப்பு இன்னும் எங்கள் வீட்டில் ஒலிக்கிறது
உன் அன்பு இன்னும் எங்கள்
இதயங்களை அரவணைக்கிறது
காலங்கள் நகர்ந்தாலும் உன் இடத்தை
யாராலும் நிரப்ப முடியவில்லை
ஒவ்வொரு நாளும் உன்னை நினைக்கிறோம்
ஒவ்வொரு பிரார்த்தனையிலும்
உன் பெயர் ஒலிக்கிறது
நீ எங்களுடன் இல்லாவிட்டாலும்
எங்கள் நினைவுகளில் என்றும்
உயிரோடு இருக்கின்றாய்
இறைவன் உன் ஆன்மாவிற்கு
நித்திய அமைதியையும்,
நிம்மதியையும் அருள்வாராக

72/50, பனிக்கர் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (CS/61785) J-1

என்றும் உன் நினைவுகளோடு
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 10 . 1948

இறப்பு
01 . 07 . 2026



## பொன்னுத்துரை தியாகராசா

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், சாவகச்சேரி கச்சாய் வீதி, சிவகுரு ஒழுங்கையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தியாகராசா அவர்கள் 01.07.2026 புதன்கிழமை சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும், இன்பராஜ் (அமெரிக்கா), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகன்யா மற்றும் புவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தக்ஷாயினி, மெகாஷினி, ரக்ஷானி, பூரணி ஆகியோரின் அன்புப் பேரனும், அன்னலட்சுமி (கனடா), பரமசிவம், அமரர் கந்தசாமி மற்றும் காந்தரூபதேவி (ஜேர்மனி), கெங்காதேவி (லண்டன்), சிறிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.07.2026 வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் தற்காலிக முகவரியில் உள்ள அவரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுரு ஒழுங்கை, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
தொடர்பு: மகள் 077 8828 887
மருமகன் 076 3782 646

தகவல்:
குடும்பத்தினர்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
15.12.1954

உதிர்வு
02.06.2026



## அமரர் சுப்பையா மயில்வாகனம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

யாழ் அனலைதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்டு, அன்பும் அறமும் நிறைந்த பண்பாளராக வாழ்ந்த எமது குடும்பத்தலைவர், கடந்த 02.06.2026 செவ்வாய்க்கிழமை அன்று எங்களை மீளாத் துயரில் ஆழ்த்தி சிவபதமடைந்தார். அன்னார் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் உருண்டோடி விட்டாலும், எங்கள் குடும்பத்தின் வழிகாட்டும் தெய்வமாக என்றென்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பார். அன்னாரின் ஆத்மா சிவனடி நிழலில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவர் இறைபதமடைந்தமையை கேள்வியுற்று, எமது துயரினைப் பகிர்ந்து கொள்வதற்காக நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், எமக்கு ஆறுதல் கூறிய, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு மலரஞ்சலியும் கண்ணீரஞ்சலியும் செலுத்தியவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், எமக்குக் கைகொடுத்து உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் சிரம்தாழ்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

21/4, சட்டநாதர் வீதி,
யாழ்ப்பாணம்

இங்ஙனம்,
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்



மண்ணில் : 23.12.1945
விண்ணில்: 28.06.2026

## திருமதி மேரி ரெஜினா விக்ரமசிங்க புஞ்சிபண்டா

ஓய்வுபெற்ற தலைமை செவிலியர்- கிளிநொச்சி மருத்துவமனை,
யாழ்ப்பாணம் பொது மருத்துவமனை, கண்டி பொது மருத்துவமனை)

நவாலியைப் பிறப்பிடமாகவும், கண்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி ரெஜீனா விக்கிரமசிங்க (லில்லி) அவர்கள் கடந்த (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை அன்று கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோசஸ் டானியல் அடைக்கலம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற புஞ்சி பண்டா விக்கிரமசிங்க (பொலிஸ் சார்ஜன்ட்) அவர்களின் அன்பு மனைவியும், ஆன் ரசிக்கா, சிராணி, ரொசானி, அஜித் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற டானியல் ஜேசுதாசன், இம்மானுவேல், தம்பிநாயகம், ஞானப்பிரகாசம், பிரான்சிஸ் சேவியர் மற்றும் திருமதி P.F.சின்னத்துரை, மேரி திரேசா ஜேசுரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு அவரின் இல்லத்தில் இன்று (02.07.2026) வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் கண்டி மஹியாவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

63, மருதடி வீதி,
[illegible] யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி P.F.சின்னத்துரை
(ஓய்வுநிலை அதிபர்)
T.P:071 636 3307

(CS 320832A)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரிபொருள் விலைச் சூத்திரம் மூடிமறைக்கிறது அரசாங்கம்



## சம்பிக்க தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 2**

**உலகச் சந்தையில் எரிபொருள் விலை பெருமளவு குறைவடைந்துள்ள போதிலும், அதன் முழுமையான பயனை தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்காமல் ஏமாற்றிவருகிறது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

நிலக்கரி இறக்குமதி ஊழல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகிச் சாட்சியமளித்த தன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் சிங்கப்பூர் நாட்டின் விலைச் சுட்டெண்ணுக்கு அமைவாகவே உள்நாட்டில் எரிபொருள் விலையைத் தீர்மானிப்பதாக அரசாங்கம் தொடர்ந்து கூறிவருகிறது. அது உண்மையாக இருந்தால், தற்போதைய உலகச் சந்தை நிலவரப்படி இலங்கையில் ஒரு லீற்றர் பெற்றோல் 220 ரூபாவுக்கும், ஒரு லீற்றர் டீசல் 230 ரூபாவுக்கும் மக்களுக்கு வழங்கப்படவேண்டும். ஆனால் அரசாங்கம் அந்த விலைக் குறைப்பைச் செய்யாமல் மறைப்பது ஏன்? தேசியமட்டத்திலான எரிபொருள் விலை நிர்ணய சூத்திரத்தை அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற நிலக்கரி இறக்குமதி மோசடிகளில் முன்னாள் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராகப் பலமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அவர் மீது இதுவரையில் எவ்வித முறையான விசாரணைகளும் முன்னெடுக்கப்படாமல் அரசாங்கம் அவரைப் பாதுகாத்துவருகின்றது- என்றார். (ச-இ)

# 10.5 பில்லியன் டொலர் இலக்கு ரணில் இருந்திருந்தால் சாத்தியம்!

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி நீடித்திருந்தால் இந்த ஆண்டின் இறுதிக்குள் 10.5 பில்லியன் அமெரிக்க டொலர் இலக்கை நாடு எட்டியிருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மக்கள் முதலில் ஒரு உண்மையை விவேகத்துடன் புரிந்துகொள்ளவேண்டும். ரணிலின் பொருளாதாரத் திட்டத்தை திட்டமிட்டபடி அமுல்படுத்தியிருந்தால், 2025 டிசெம்பர் 31க்குள் நாடு 8.5 பில்லியன் டொலர் இலக்கையும், 2026 இறுதிக்குள் 10.5 பில்லியன் டொலர் இலக்கையும் எட்டியிருக்கலாம்.

ஆனால், தற்போதைய ஆட்சியாளர்களின் அறிவின்மையால் அவை அனைத்தும் சீர்குலைந்துள்ளன. இதற்கு சர்வதேச நாணய நிதியத்தைக் குறை சொல்லிப் பயனில்லை. வாக்காளர்களுக்குப் பொய்களைக் கேட்பதற்குத்தான் பிடிக்கும். இனிமையான பொய்களை நம்பி வாக்களித்ததன் விளைவை இன்று நாடு அனுபவிக்கிறது. நாட்டில் தற்போது ஒரு நுளம்பைக் கூடக் கட்டுப்படுத்தமுடியாத வக்கற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இப்போதாவது தற்போதைய பொருளாதார நெருக்கடி என்பது மக்களின் அறியாமையினால் அவர்களே உருவாக்கிக்கொண்டது என்பதைப் புரிந்துகொண்டால் நன்று என்றார். (ச-இ)



# கொள்கை முரண்பாட்டில் மத்திய வங்கி – திறைசேரி

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

மத்திய வங்கி மற்றும் திறைசேரி ஆகிய இரு பிரதான நிறுவனங்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கொள்கை முரண்பாடுகளை ஆராய்ந்து தயாரிக்கப்பட்ட அரசாங்க நிதி பற்றிய குழுவின் இறுதி அறிக்கை, அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். இந்தக் குழுவின் விசாரணை அமர்வுகள் அனைத்தும் முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்பட்டுள்ளதால், அதுதொடர்பான காணொளிப் பதிவுகளும் நாட்டின் பொதுமக்களின் பார்வைக்காக விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். மத்திய வங்கி மற்றும் திறைசேரியுடன் நாங்கள் மூன்று கலந்துரையாடல்களை நடத்தினோம். இதன்போது அவர்கள் இரண்டு வெவ்வேறு அறிக்கைகளை சமர்ப்பித்தார்கள். திறைசேரி வழங்கிய அறிக்கையில் இருந்த பல விடயங்களை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளாததன் காரணமாகவே, மத்திய வங்கியின் அறிக்கை தனியாக சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, இந்த இரண்டு அறிக்கைகளையும் நாங்கள் ஆழமாக பகுப்பாய்வு செய்து ஒரு வரைபு அறிக்கையைத் தயாரித்துள்ளோம். அந்த வரைபு தற்போது நிதிக்குழுவின் அனைத்து உறுப்பினர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதனை வாசித்துவிட்டு தங்களது கருத்துகளை முன்வைக்கவேண்டும். உறுப்பினர்களின் கருத்துகள் கிடைத்தவுடன், அந்த அறிக்கையை இறுதிசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த வாரம் நாடாளுமன்றம் கூடும் வாரம் என்பதால், நாடாளுமன்றத்தில் அந்த அறிக்கை முறையாகச் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# கடற்படைத் தளபதியாக டேமியன் பெர்னாண்டோ



கொழும்பு, ஜூலை 02

இலங்கைக் கடற்படையின் புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அத்மிரால் டேமியன் பெர்னாண்டோ ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை கடற்படையின் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றிய ரியர் அத்மிரால் டேமியன் பெர்னாண்டோ, வைஸ் அத்மிரால் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டு இலங்கைக் கடற்படையின் 27ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்குரிய நியமனக்கடிதம், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய கடற்படைத் தளபதி அத்மிரால் காஞ்சன பானகொட பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)


**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் மூன்று அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் மற்றும் தம்பதிகள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :- 074 291 9908

(CS/32081) J-1

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.

ஒரு சதுர அடி - 85.00 ரூபாய்.

நிலம் இழுத்து பதிக்க - 120 ரூபாய்

077 334 1281

(cs 61793) N

**யா/நீர்வேலி அத்தியார் இந்துவின்**

**மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்புப் பாராட்டும்**



இன்று 02.07.2026 வியாழக்கிழமை ஓய்வுபெறும் எங்கள் கல்லூரியின் ஸ்தாபகரின் பேர்த்தியும், உப அதிபரும், விஞ்ஞான பாட ஆசிரியையும், சுற்றாடல் சார் செயற்பாட்டில் ஜனாதிபதி விருது பெற்றவருமான

**திருமதி இராஜராஜேஸ்வரி சிவகுமாரன் (SLTS-I)**

அவர்களின்

**மணிவிழா வாழ்த்து**


Best Wishes

எழுத்தறிந்து ஏழ்மை தொலைந்து
வாழ்வு சிறந்திட வலுச் சேர்த்த
"மனிதாபிமானி" அத்தியாரின் பேர்த்தியாய்
சிந்தையுள் என்றுமே நீர்வையர்
நானிலம் போற்ற வாழ வேண்டும்
எனும் நோக்கோடு
விஞ்ஞானப் பணி தந்து
முகாமைசெய் பணிதனில்
உப அதிபராக வளம்சேர்த்து
காலத்திற்கு ஒவ்வ மாற்றலுறு
கல்விக்கு உடனிசைந்து செயற்பட்ட
ஜனாதிபதி விருதுவென்ற அம்மையே
வாழி பல்லாண்டு !!!!! வாழி பல்லாண்டு !!!!!

சேவைக்காலம்
யா/ நீர்வேலி தெற்கு இ.த.க பாடசாலை
06.12.1990 - 11.02.1992
யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
12.02.1992 - 10.06.1997
யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்
11.06.1997 - 07.03.1999
யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
08.03.1999 - இன்று வரை
மகரகம தேசிய கல்வி நிறுவகம்
ஆசிரிய பயிற்சி 1993 - 1995

வாழ்த்துவோர்
**ஆசிரிய நட்புறவுக் கழகத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பேச்சு மேசைக்கு வருவதற்கு நிபந்தனை விதித்தது ஈரான்

## வெனிசுலா நில அதிர்வால் 2,000 பேர்வரை உயிரிழப்பு

கராகஸ், ஜூலை 2

வெனிசுலாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த இரட்டை நிலநடுக்கங்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,943 ஆக அதிர்ச்சியூட்டும் வகையில் அதிகரித்துள்ளது. மேலும், இடிபாடுகளில் சிக்கியோ அல்லது நிலச்சரிவுகளில் அகப்பட்டோ 43,000க்கும் மேற்பட்டோர் இன்னும் காணாமல் போயுள்ளனர் என்று அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெனிசுலா அரசாங்கம், எதிர்க்கட்சிகள், யுனிசெஃப் அமைப்பு மற்றும் நாசா உள்ளிட்ட தேசிய மற்றும் சர்வதேச வானூர்தியியல் முகவர் அமைப்புகள் இணைந்து திரட்டிய கூட்டுத் தரவுகளின் அடிப்படையில் இந்தத் துயரமான புள்ளிவிவ ரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. காணாமல் போனவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (ஏ-இ)

டோஹா, ஜூலை 2

மத்திய கிழக்கில் நிலவிவரும் தீவிர பிராந்திய பதற்றத் தணிப்பு மற்றும் ஈரான் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து கலந்துரையாடுவதற்காக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சிறப்புத் தூதர்கள் கட்டார் பிரதமரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் சிறப்புத் தூதர்களான ஸ்டீவ் விட்கோஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோரை, கட்டார் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசிம் அல் தானி டோஹாவில் சந்தித்து இந்நடவடிக்கை குறித்து விரிவாக ஆலோசித்தார்.

இதேவேளை, ஈரானியப் பேச்சுவார்த்தைக் குழுவினரும் தற்போது டோஹாவில் முகாமிட்டுள்ள போதிலும், அமெரிக்கா ஈரான் தரப்புகளுக்கு இடையே எவ்வித நேரடி பேச்சுவார்த்தைகளும் திட்டமிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதி உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்னதாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தரப்புகள் சில பிரதான நிபந்தனை களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என ஈரானிய நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாஃப் வலியுறுத்தியுள்ளார். லெபனானில் தொடரும் இஸ்ரேலின் இராணுவத் தாக்குதல்கள் முற்றிலும் நிறுத்தப்படவேண்டும், வொஷிங்டனால் விதிக்கப்பட்டுள்ள ஈரானிய எண்ணெய் மீதான தடைகள் உடனடியாக நீக்கப்படவேண்டும், சர்வதேச அளவில் முடக்கப்பட்டுள்ள ஈரானிய நிதிகள் அனைத்தும் விடுவிக்கப்படவேண்டும் என்பவையே ஈரானின் முதன்மையான நிபந்தனைகளாக உள்ளன. (ஏ-இ)

### அவசரகாலச்...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- டித்வா பேரிடரையடுத்து எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடிய பின்னர் அவசரகாலச் சட்டத்தை அமுலாக்கம் செய்வதற்கு ஜனாதிபதி அநுர நடவடிக்கை எடுத்திருந்தார். அத்தியாவசிய சேவைகளை தடையின்றி முன்னெடுக்கும் நோக்கில் மட்டுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாறாக இந்தச் சட்டத்தை அடக்குமுறைக்காகப் பயன்படுத்தவில்லை. அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்குத் தற்போது இல்லை. நீடிக்கப்படாமல் விடும் பட்சத்தில் அந்தச் சட்டம் தானாகவே இல்லாமல் போய்விடும் - என்றார். (அ-ம)

### காணிக்...

ஆணைக்குழுவின் வடக்கு வலயப் பணிப்பாளர் தி.விமலன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

காணிப் பயன்பாட்டுக்கான குத்தகைப் பணம் செலுத்துதல், நிலஅளவைக் கட்டணம் செலுத்துதல், ஆணைக்குழுவின் ஏனைய அனைத்துக் கட்டணங்களையும் செலுத்துதல் உள்ளிட்டவற்றுக்காக அலுவலகம் வருகை தரும் போது பொதுமக்கள் தங்களின் வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தைக் கட்டாயம் கொண்டுவருதல் வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-26)

### கடவுச்...

எடுக்கப்பட்டது. இதன்போதே, மடிக்கணினி, திறன்பேசி உள்ளிட்டவற்றின் கடவுச் சொற்களை வழங்குமாறு சுரேஷ் சாலேக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், குற்ற ஒப்புதல் வாக்குமூலமாக அமையாத வாக்குமூலத்தை, நீதிவான் முன்பாக வழங்க அனுமதிக்குமாறு சுரேஷ் சாலேயால் விடுக்கப்பட்ட கோரிக்கையையும் நீதவான் நிராகரித்துள்ளார். (அ-ம-இ)

### ஈழத்துச்...

மணி வரையுள்ள மிதுன லக்கின சுப முகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த 29ஆம் திகதி விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 10 மணி முதல் நாளைமறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் இடம்பெறும். மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (அ-ம-26)

### துணைவேந்தர்...

ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். இதையடுத்து, பல்கலைக்கழக மட்டத்தில் விசேட குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், தனக்கு அவதூறு ஏற்படும் வகையில் சமூக வலைத்தளத்தில் கருத்துகள் பகிரப்படுவதாகவும், அத்தகைய நபர்களுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பேராசிரியர் ரகுராம் கூறியிருந்தார். இதைத் தொடர்ந்தே, தனக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கருத்துகளைப் பதிவிட்டனர் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட 14 தரப்புகளுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் பேராசிரியர் ரகுராமால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுப் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து எதிர்வரும் 10ஆம் திகதிக்கு வழக்குத் திகதியிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

### உணவுத்...

முதல் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு சுரேஷ் சாலே விசாரிக்கப்பட்டு வருகின்றார். இந்த நிலையில், விசாரணைகளை மேற்பார்வையிடுவதில் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பாளரை நீக்க வேண்டும், தன்னை வேறொரு தடுப்புக் காவல் மையத்துக்கு மாற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சுரேஷ் சாலே உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார். எனினும், அவருக்கு மூக்கு வழியாக உடலுக்குத் தேவையான போஷாக்குகள் வழங்கப்பட்டன. இவ்வாறான நிலையிலேயே, தனது உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுவதாக சுரேஷ் சாலே நேற்று அறிவித்துள்ளார். சுரேஷ் சாலே தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

### அதிகாரங்களைப்...

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். தெல்லிப்பழை மருத்துவமனையை மத்தியின் கீழ் கொண்டு செல்வதற்கு இடம்பெற்றுவரும் முன்னெடுப்புகள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெல்லிப்பழை மருத்துவமனையை மத்தியின் கீழ் கொண்டு செல்வதற்கு இடம்பெறும் முன்னெடுப்புகளை நாங்கள் தீர்க்கமாக எதிர்க்கின்றோம். மத்தியின் கீழ் இவற்றைக் கொண்டு சென்றால் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும், விரைவாக அபிவிருத்தியடையும் எனவும் கூறுகின்றனர். இந்தக் கூற்று வேடிக்கையானது. மத்தியின் கீழ் மருத்துவமனையைக் கொண்டுசென்றால் மருத்துவர்கள் அனைவரும் மாறிவிடுவார்களா? அல்லது கூடுதலான மருத்துவர்கள் இறக்குமதி செய்யப்படுவார்களா? மருத்துவமனையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற தூய நோக்கம் இருந்தால் மாகாணசபையின் கீழ் அதைப் பேணியபடி இந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும். இதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

பாடசாலைகள் மருத்துவமனைகள் என அனைத்தையும் மத்தியின் கீழ் கொண்டு செல்வதற்காகவே தேர்தல் பிற்போடப்பட்டு வருவதாக எண்ணத் தோன்றுகின்றது. வடமாகாணசபையின் அதிகாரங்களையும், திணைக்களங்களையும், பாடசாலைகளையும் மத்தியின் கீழ் எடுத்துவிட்டு வெற்றுக் கோதுக்காகத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா எனவும் நாங்கள் சிந்திக்கின்றோம். எனவே இத்தகைய சட்டவிரோதச் செயற்பாடுகளை அரசாங்கம் கைவிட வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-26)

### உலக...

துள்ளது. 'இலங்கையின் வளர்ச்சி, நெகிழ்ச்சித்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கொள்கைத்திட்டம்' என இந்த உதவித் திட்டத்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது. இலங்கையில் உலக வங்கியின் சில திட்டங்கள் தற்போது அமுலில் உள்ளன. அந்தத் திட்டங்களுக்கு மேலதிகமான முறையிலேயே இந்த உதவித்திட்டம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரமற்ற நிலக்கரி இறக்குமதி 8.49 பில்லியன் ரூபா நட்டம்!

## நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு அறிக்கை

கொழும்பு, ஜூலை 2

நுரைச்சோலை 'லக்விஜய' நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்காக கடந்த காலங்களில் இறக்குமதிசெய்யப்பட்ட நிலக்கரிவிநியோகத்தில் நிகழ்ந்துள்ள பாரிய முறைகேடுகள் காரணமாக, நாட்டுக்குச் சுமார் 8.49 பில்லியன் ரூபா நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்றப் பொதுப் பயன்பாடுகள் பற்றிய மேற்பார்வைக் குழுவில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்றக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை குறித்து குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவிக்கையில், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் தொழில்நுட்பத் தரத்துக்கு முரணான, தரக்குறைவான நிலக்கரி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலக்கரியில் சாம்பலின் அளவு அனுமதிக்கப்பட்ட மட்டத்தைவிட மிக அதிகமாகக் காணப்பட்டுள்ளது. சர்வதேச ஒப்பந்த விதிகளின்படி, தரக்குறைவான நிலக்கரியை விநியோகித்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விநியோகஸ்தர்களுக்கு எதிராகப் பல மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், அரசியல் செல்வாக்கு மற்றும் அதிகாரிகளின் பாராமுகம் காரணமாக இந்த அபராதத் தொகைகள் இதுவரை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படவே இல்லை என்றார். அதேவேளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு, இந்த 849 கோடி ரூபா ஊழல் குறித்து தற்போது விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளது.

விசாரணையின் இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி கடந்த செவ்வாய்க்கிழமை ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகி, சுமார் இரண்டு மணிநேரம் விரிவான வாக்குமூலத்தை வழங்கியுள்ளார். அமைச்சர்கள், செயலாளர்கள் சிக்கினர்: வலுசக்தி அமைச்சின் தற்போதைய மற்றும் முன்னாள் செயலாளர்கள் உட்பட 60க்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளிடம் இருந்து இதுவரை 100க்கும் மேற்பட்ட வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேசிய கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் மற்றும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகியனவும் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட நிலக்கரி விநியோகத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

வடமராட்சி பொலிகண்டி மருதாமபுலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான அதிசுந்தரநாதன பஞ்சதள இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7.26 மணிமுதல் 9.02 மணிவரை நடைபெறவுள்ளது.

இதன்போது, 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்' எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி. அருளாந்தன் தெய்வீகப் பேருரையாற்றவுள்ளார். (ச)

# தோணி கவிழ்ந்ததில் 4 மாணவர்கள் சாவு!

வனாத்தவில்லுவ பகுதியில் உள்ள மங்களபுர ஏரியில் தாமரை மலர்களைப் பறிப்பதற்காகத் தோணியில் சென்ற பாடசாலை மாணவர்களில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக பதிவாகியுள்ளது.

மாணவர்கள் 5 பேர் தோணியில் சென்று கொண்டிருந்தபோது, தோணி தலைகீழாகக் கவிழ்ந்ததில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

அவர்களில் ஒரு மாணவர் நீந்திக் கரை சேர்ந்து உயிர் தப்பியுள்ளார். ஏனைய நால்வரும் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மாணவர்கள் 16 வயதுடைய பண்டாரநாயக்கபுர மற்றும் மங்களபுர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

சம்பவம் குறித்து வனாத்தவில்லுவ பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# லொத்தர் சபை முன்னாள் தலைவர் ஷியாமிலா கைது

கொழும்பு, ஜூலை 2

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் முன்னாள் தலைவரான ஷியாமிலா பெரேரா, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் முன்னாள் தலைவராக அவர் இருந்த காலத்தில் நியமிக்கப்பட்ட 3 அதிகாரிகளை, அந்த நிறுவனத்தில் பணியமர்த்துவதற்குப் பதிலாக, அப்போதைய அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அலுவலகத்தில் பணிபுரிய அமர்த்தியதன் மூலம் நிகழ்ந்த ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் சந்தேகநபரை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவித்து, வெளிநாட்டு செல்ல பயணத்தடை விதித்தும் நீதிவான் உத்தரவிட்டார். (ச-இ)

காணி விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு உரும்பிராய் கற்பகபிள்ளையார் வீதியில் 9 பரப்பு வீடு கட்டக்கூடிய தேசித்தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.

குறிப்பு. காபெட் வீதி

தொடர்புகளுக்கு :- 077 331 0039

(CS/32079) J-1

N. BABU

ஆசிரியரின்....

A/L - 2026

மாணவர்களுக்கான.....

புவியியல் கருத்தரங்கு

யூலை - 04, 05, 09,10 திகதிகளில்

ஆரம்பம் : 04.07.2026 (சனி -10am)

- புதிய, வெளி மாணவர்கள் பங்குபற்றலாம்
- முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள் ஆராயப்படும்

DMI ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்

T.P. 077 936 5087

(cs 32076) N

# மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 08 . 1947

மறைவு 29 . 06 . 2026

## திரு. தெட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம்

(ஓய்வுபெற்ற S.I.O உள்ளூராட்சித்திணைக்களம்,
முன்னாள் கலட்டி அம்மன் கோவில் தலைவர்)

சீனியர் ஒழுங்கை, கலட்டியை பிறப்பிடமாகவும், 87, பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம் (ஓய்வுபெற்ற S.I.O உள்ளூராட்சித்திணைக்களம், முன்னாள் கலட்டி அம்மன் கோவில் தலைவர்) அவர்கள் கடந்த (29.06.2026) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் தெட்சணாமூர்த்தி பொன்னம்மா தம்பதியரின் மகனும், துரைராஜசிங்கம் - அருளம்மா தம்பதியரின் மருமகனும், விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும், சிவப்பிரியா, ரஞ்சிதா, லக்ஷி ஆகியோரின் அன்புத் தந்தையும், கரன், கஜீந்திரன் ஆகியோரின் பெரியதந்தையும், மயூரன், குகநாதன், சிறிகேசவன், நர்மிஜா, ரம்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹறினா, ஹறினி, பிறித்திகா, விதுர்னன், பிரணவன், ஆராதனா, ஆதிரன், சஜீவ், சுடிக்ஷா ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான புஜ்பராஜலிங்கம், புஸ்பரோசாமணி, தவராஜலிங்கம் மற்றும் மீனாம்பிகை, ஜெயராஜலிங்கம், ஜெயபாலன், ஜெயந்தி ஆகியோரின் சகோதரனும், இராஜசிங்கம், ஜெயபாலசிங்கம், சுகிர்தலக்ஷிமி, செல்வகுமார், செல்வேந்திரன், மாலினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
87, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு

(CS/32080) J-1

SAAI
SENIOR CARE MAINTENANCE SERVICE
சாய் முதியோர் பராமரிப்பு சேவை



உங்கள் தாய் தந்தையரை வீட்டில் வந்து பராமரிக்க வேண்டுமாயின் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

நம்பிக்கை வாய்ந்த நிறுவனம் | நம்பிக்கையான ஊழியர்கள் | சிறந்த பராமரிப்பு

GPS ROAD KALVIYANKADU தொடர்புகளுக்கு :- 0775005412

CARE | COMPASSION | COMMITMENT We care for them, like they cared for us.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.